செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், மணப்பாக்கம் கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தினை திறந்து வைத்து நெல் கொள்முதலை குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.அருண்ராஜ், திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியச் செயலாளர் வீ.தமிழ்மணி, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் ஆர்.டி.அரசு, பேரூர் செயலாளர் ஜி.டி.யுவராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நொளம்பூர் வே.ராஜன், எம்.இ.ஸ்டாலின் பங்கேற்பு!

144 வது வட்ட கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

ம.உதயகுமார் அறிக்கை!

சென்னை ஜன:22

சென்னை தெற்கு மாவட்டம்,மதுரவாயல் வடக்கு பகுதி, 144 வது வட்ட கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் 144 வது வட்டத்தில் இன்று (2201 2025 புதன்கிழமை) மாலை 5:30மணி அளவில் மதுரவாயல் 144 வது வட்ட கழக அலுவலகத்தில் வட்டக் கழக அவைத் தலைவர் ப.பக்தவச்சலம் தலைமையில் கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் 144 வது மாமன்ற உறுப்பினர் எம்.இ.ஸ்டாலின் ஆர்.ராஜ்குமார்,ஏ.அலெக்சான்டர் எஸ்.சம்பத் ,எஸ். கஸ்தூரி, யோ.சாந்தராஜ்,எஸ். தர்மலிங்கம். அ.ஞாணசீலன், ம.விஜயகுமார், எஸ்அசோக்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மதுரவாயல் வடக்கு பகுதி கழக செயலாளர் வளசரவாக்கம் மண்டல குழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

இக்கூட்டத்தில் 25.01.2025 ஆம் தேதி அன்று மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்திற்கு வருகை தரவுள்ள தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வருகை குறித்து ஆலோசிக்கப்பட உள்ளது.

ஆகவே நம்முடைய 144 வது வட்டக் கழகத்தில் உட்பட்ட பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வட்டக் கழக நிர்வாகிகள் கழக முன்னோடிகள் கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பகுதி பொருளாளர் ம. உதயகுமார் தெரிவித்துள்ளார்.

சென்னை வடக்கு மாவட்ட கழக கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் ஆர்.வெற்றிவீரன் தலைமையில் ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, ஜே.ஜே.எபிநேசர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர் ஆர் டி சேகர் ஆலோசனை வழங்கினார். கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், பொது குழு உறுப்பினர்கள், வட்ட செயலாளர்கள், பகுதி நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் தெற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர்

இளைஞர் அணி அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் அறிமுக - ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர். பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!

விழுப்புரம், ஜன.22

விழுப்புரம் தெற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அறிமுக ஆலோசனைக்கூட்டம் நடைபெறுகிறது.

மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி அறிக்கை வருமாறு:-

கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்களின் ஆலோசனைக்கிணங்க விழுப்புரம் தெற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அறிமுக ஆலோசனைக்கூட்டம் மாவட்ட பொறுப்பாளராகிய எனது (டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி) தலைமையில் நாளை (23.01.2025 வியாழக்கிழமை) அன்று காலை 9.00 அளவில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கத்தில் மாநில இளைஞர் துணைச் செயலாளர் ப.அப்துல் மாலிக் முன்னிலையில் நடைபெறுகிறது.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன் வரவேற்புரையாற்றுகிறார். மாவட்ட துணை அமைப்பாளர்கள் எஸ்.அன்பு, TDJ ராஜவேல், ச.பாலாஜி, ப.கலைவாணன், ஏ.சி.கே.பிரேம், ஏ.கே.தேவேந்திரன் உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர். பொன். கௌதம சிகாமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. – க.தனசேகரன் எம்.சி. பங்கேற்பு

கலைஞர் நகர் தெற்குப் பகுதிக் கழக ஆலோசனைக் கூட்டம்!

பகுதிச் செயலாளர் கே.கண்ணன் அறிக்கை

சென்னை, ஜன. 22 -

கலைஞர் நகர் தெற்குப் பகுதிக் கழக ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது என பகுதிச் செயலாளர் கே. கண்ணன் அறிவித்துள்ளார். இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

சென்னை தெற்கு மாவட்ட செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தல் படி, தமிழுக்காக தன் இன்னுயிரை தீக்கிரையாக்கிய தீரர்கள் நினைவாக வீரவணக்க நாளை முன்னிட்டு, இளைய தலைவர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்ளும் மதுரவாயல் பொதுக்கூட்டத்தில் பெருவாரியாக கலந்து கொள்வது தொடர்பாகவும், விருகம்பாக்கம் அரங்கநாதன் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்துவது தொடர்பாகவும் கலைஞர் தெற்குப் பகுதிக் கழக ஆலோசனை கூட்டம் இன்று (22 - 1 - 2025 - செவ்வாய்கிழமை) காலை 11 மணி அளவில் எண். 32 / 77, அண்ணா பிரதான சாலை, எம்.ஜி.ஆர். நகர் என்ற முகவரியில் உள்ள கலைஞர் நகர் தெற்கு பகுதி கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் பகுதி அவைத் தலைவர் எஸ். உமாபதி தலைமை வகிக்கிறார். இக்கூட்டத்தில் ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ., கணக்கு நிலைக் குழு தலைவர் க.தனசேகரன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகின்றனர்.

இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர்கள். பகுதி கழக நிர்வாகிகள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு பகுதிச் செயலாளர் கே. கண்ணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. பொது மக்களின் நலன் கருதி தாம்பரம் காவல் நிலைய அதிகாரிகளின் கோரிக்கையை ஏற்று, தாம்பரம் காவல் நிலையத்திற்கு உட்பட்ட முக்கிய இடங்களில் கண்காணிப்பு கேமரா அமைக்க, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.25 இலட்சம் வழங்கினார். தற்போது கேமரா அமைக்கும் பணியினை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் 33வது வட்ட செயலாளர் எம்.வினோத் மற்றும் பணியாளர்கள் உள்ளார்.

சோழிங்கநல்லூர் - பல்லாவரம் கோட்டத்தில் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் நாள்!

சென்னை, ஜன.22-

சோழிங்கநல்லூர் மற்றும் பல்லாவரம், கோட்ட மின்நுகர்வோர் குறைதீர்க்கும் கூட்டம் 23.01.2025 (வியாழக்கிழமை) காலை 10.30 மணியளவில், செயற் பொறி யாளர் / இயக்கம் & பராமரிப்பு / பல்லாவரம் அலுவலகம், 110 கி.வோ, பல்லாவரம் துணை மின் நிலையம், ஆபிசர்ஸ் லேன் பல்லாவரம், சென்னை - 43 அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

பொதுமக்கள் இந்த கூட்டத்தில் கலந்துகொண்டு தங்கள் குறைகளை தெரிவித்து நிவாரணம் பெற்றுக் கொள்ளலாம் என மேற்பார்வைப் பொறியாளர் / சென்னை மி.ப.வ. / தெற்கு-2 கேட்டுக் கொண்டுள்ளார்.

யு.ஜி.சி புதிய விதிகளை திரும்பப் பெற வலியுறுத்தி

முதல்வர் கொண்டு வந்த தனித் தீர்மானம்!

ஆதித்தமிழர் பேரவை வரவேற்கிறது! இரா.அதியமான் அறிக்கை!

சென்னை ஜன:22

இதுகுறித்து ஆதித்தமிழர் பேரவை இரா.அதியமான் விடுதுள்ள அறிக்கை வருமாறு;

கல்வி உரிமையையும் சமூக நீதியையும் அழிக்க நினைக்கின்ற வகையில் யு.ஜி.சி யின் வரைவு விதிமுறையை அறிவித்திருக்கிறது ஒன்றிய பாசக அரசு.

இந்த U.G.C விதிமுறையை நாம் ஏற்பதற்க்கில்லை என்பதோடு ஒன்றிய அரசு இதை திரும்ப பெற வேண்டும் என்று முதல்வர் அவர்கள் சட்டமன்றத்தில் கொண்டு வந்த தனித் தீர்மானத்தை ஆதரிப்பதோடு ஆதித்தமிழர் பேரவை வரவேற்கிறது.

தமிழ்நாட்டின் கல்விக் கட்டமைப்பு என்பது மிகவும் வலுவான ஒன்றாக திகழ்கிறது இதற்க்காக நமது முதல்வர் அவர்கள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி ஒரு நீண்ட நெடிய இலக்கத்தை நிர்ணயித்திருக்கிறது நமது திராவிட மாடல் அரசு.

பிற மாநிலங்களோடு ஒப்பிடும் போது அபார வளர்ச்சி பெற்றுள்ள தமிழ்நாட்டின் கல்லூரி கல்வி வளர்ச்சிக்கு இவ் விதிகள் கடிவாளம் போடும் விதமாகவும் ஆளுநர்களுக்கு அதிகாரம் வழங்கியிருக்கிறார்கள்.

பல்கலைகழங்களில் முற்போக்கும் அறிவியல் மனப்பான்மை கொண்ட துணை வேந்தர்களை தேர்வு செய்வதையும் சமூக நீதியையும் தவிர்ப்பதற்க்காக மாநிலங்களை கலந்தாலோசிக்காமல் ஆளுநர்களே நேரடியாக நியமித்துக் கொள்ளலாம் என ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் தனது துறை அறிவிப்பில் தெரிவித்திருக்கிறார்.

அதே போல் ஆளுநரின் பதவிக் காலம் மூன்றாண்டுகளில் இருந்து ஐந்து தாண்டுக்கு நீட்டிப்பு செய்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அரசை முடக்கவும் நினைக்கிறார்கள்.

ஏற்கனவே நிதி ஒதுக்கீடு செய்யாமல் பல்கலை கழகங்களை முடக்கும் ஒன்றிய அரசு மாணவர்களின் உயர்கல்வியை சிதைக்க முயல்வதோடு ஆளுநர் அரசியல் செய்ய வழி வகையையும் ஏற்படுத்தி கொடுத்திருக்கிறார்கள்.

உயர்கல்வி தொடர்பான இது போன்ற U.G.C விதியானது அரசியலமைப்பு சட்டத்தின் ஒன்றிய பட்டியலில் இல்லை. பொதுப்பட்டியலில் தான் இருக்கிறது. பொதுப் பட்டியலில் இருக்கும் ஒரு சட்டத்தில் தன்னிச்சையாக பாசக அரசு முடிவெடுப்பது எதேச்சிகரமானது

இது மாநில அரசுகளை மட்டுமல்ல கல்வியையே சிதைக்கின்ற நடவடிக்கை ஆகும். ஆதலால் ஆளுநரின் அதிகாரங்கள் பறிக்கப்பட வேண்டும்.

என்பதோடு ஒன்றிய அரசின் U.G.C வரைவு விதிகளை திரும்ப பெற வலியுறுத்தி தமிழ்நாடு முதல்வர் அவர்கள் சட்டமன்றத்தில் கொண்டு வந்த தனித் தீர்மானத்தை ஆதரிப்பதோடு வரவேற்கிறது என்பதையும் ஆதித்தமிழர் பேரவை சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்

இவ்வாறு இரா.அதியமான் தெரிவித்துள்ளார்.

வீரவணக்க நாளை முன்னிட்டு

மொழிப்போர்த் தியாகி அரங்கநாதன் நினைவிடத்தில் அஞ்சலி!

கழகத் தோழர்களுக்கு சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் வேண்டுகோள்!

மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாளை முன்னிட்டு, தீந்தமிழ் காக்க தம் தேக்கு மர தேகங்களை வெந்தழலுக்கு விருந்தாக்கி மறைந்தும், தமிழர் நெஞ்சில் மறவாமல் வாழ்கின்ற வீரமறவர்களாம், தமிழ் காத்த தியாக தீபமான மொழிப்போர் தியாகி அரங்கநாதன் அவர்களுக்கு வருகிற 25-1-2025 சனிக்கிழமை அன்று காலை 8.30 மணியளவில் சென்னை, விருகம்பாக்கத்தில் உள்ள நினைவிடத்தில் கழகப் பொருளாளர் **டி.ஆர்.பாலு**, எம்.பி., சென்னை தெற்குமாவட்டச்செயலாளர்மாண்புமிகுமா.சுப்பிரமணியன் மற்றும் கழக முன்னணியினர் மலர்வளையம் வைத்து வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

கழக மாநில அமைச்சர் பெருமக்கள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை,இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவ அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, நெசவாளர் அணி, வர்த்தகர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் வருகை தந்து மொழிப்போர் தியாகிக்கு அஞ்சலி செலுத்த வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

நாள் – 21 – 1 – 2025
சென்னை – 32

அமைச்சர் **மா.சுப்பிரமணியன்**
செயலாளர் – சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

மு.க.எனும் முகவரி நூல் வெளியிட்டு விழா சென்னை அறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகம் வளாகத்தில் நடைப்பெற்றது. கழக துணை அமைப்பு செயலாளர் திரு. வி.க .சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி நூலை வெளியிட்டு கவிஞர்களுக்கு நினைவு பரிசு வழங்கி வாழ்த்துரை வழங்கினார். 86 வது வார்டு சென்னை பெருநகராட்சி உறுப்பின் எம்.கமல், கவிஞர் வள்ளிமைந்தன், தொண்டர் அணி தோழர் சிட்கோ எஸ். அன்வர்தீன் தலைமையில் நிகழ்ச்சி நடைபெற்றது.

இளையான்குடி வடக்குஒன்றிய கழகத்தின் சார்பில்

தமிழர் திருநாள் பொங்கல் விழா கழகக் கொடியேற்றம்!

தமிழரசி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சிவகங்கை, ஜன. 22 -

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வடக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் தமிழர் திருநாளை முன்னிட்டு பொங்கல் விழா செந்தமிழ்நகர், மாதவநகர், தாயமங்கலம் ஆகிய கிராமங்களில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. பொங்கல் வழங்கி தூய்மை பணியாளர்களுக்கு புத்தாடைகளை வழங்கினார் . முன்னாள் எம்.எல்.ஏ. வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் சுப.மதியரசன் தலைமையில் நிகழ்ச்சி நடைபெற்றது .

இந்த விழாவில் நிர்வாகிகள் விவசாய அணி காளிமுத்து கூட்டுறவு சங்க தலைவர் சுப.தமிழரசன், ச.குழந்தை பாண்டியன், இபுராகிம்ஷா, மு.சத்தியேந்திரன், பஞ்சவர்ணம், இந்திரா தேவி, கா.முத்துராம லிங்கம், தகவல் தொழில்நுட்ப அணி கண்ணன் உட்பட ஊராட்சி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி, 141 (அ) வட்டத்தில் பொங்கல் திருநாளை முன்னிட்டு 141 (அ) வட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் எஸ்.லட்சுமிகாந்தன், மாவட்டப் பிரதிநிதி எஸ்.மோகன்ராஜ், 141 (அ) வட்டப் பொருளாளர் என்.நாராயணன் ஆகியோரின் ஏற்பாட்டில் 500 தாய்மார்களுக்கு புடவை மற்றும் இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கும் சமத்துவப் பொங்கல் விழா ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இந்த விழாவில் மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ, மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, ராஜா அன்பழகன் எம்.சி. ஆகியோர் நல உதவிகளை வழங்கினர். இந்த விழாவில் தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, வட்டக் கழகச செயலாளர்கள் மு.ம.செந்தில்குமார், ஜி.பி.செந்தில்குமரன் மற்றும் 141 (அ) வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னணியினர் பலர் கலந்து கொண்டனர்.